**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

सत्यमेव जयते

✆ Off. : 0413-2333399, 2335530
2335328, 2335522
Fax : 0413-2333135
Res. : 0413-2339099

Date :

## குடியரசு தின வாழ்த்துச் செய்தி

எனது அன்பிற்குரிய புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் இனிய குடியரசு நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நமது இந்தியத் திருநாடு மக்களாட்சி நாடாக மலர்ந்ததை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் சனவரித் திங்கள் 26-ஆம் நாளை குடியரசுத் திருநாளாக நாடு முழுவதும் உள்ள மக்கள் எழுச்சியோடும், தேசப் பற்றோடும் கொண்டாடி வருகின்றனர். 1950 - ஆம் ஆண்டு இந்த நன்னாளில் தான் இந்திய அரசியலமைப்பு சாசனம் நிறைவேற்றப்பட்டது.

நமது தாய்நாட்டினை அந்நியர்களின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றி, ஒவ்வொரு மனிதனும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கப் பாடுபட்ட தேசத் தலைவர்களையும், நாட்டிற்காக தங்களது இன்னுயிரை ஈந்த தியாகிகளையும், அரசியலமைப்புச் சாசனத்தை வகுத்துத் தந்த தலைவர்களையும் இந்த இனிய நாளில் நினைந்து போற்ற வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

நமது புதுச்சேரி மாநிலம் சிறிய மாநிலமாக இருந்தாலும் கூட மற்ற மாநிலங்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் மிக வேகமாக முன்னேறி வரும் மாநிலமாகவும், அமைதியான, பாதுகாப்பான சூழலைக் கொண்ட மாநிலமாகவும் விளங்கி வருகிறது.

கல்வி, மருத்துவம், வேளாண்மை, உள்கட்டமைப்பு, தொழில், சுற்றுலா என அனைத்துத் துறைகளிலும் புதுச்சேரி மாநிலத்தை மேன்மேலும் மேம்பாடு அடையச் செய்யும் நோக்கில் எமது அரசு நாள்தோறும் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

நமது மாநிலத்தில் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கொண்டு வருவாயைப் பெருக்கவும், தேவையான நிதி ஆதாரங்களை மத்திய அரசிடம் கேட்டுப் பெறவும் எங்களது அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மக்களுக்கு எந்த வகையிலும் சிரமமில்லாமல் அனைத்து நலத்திட்டங்களும் காலத்தோடு எளிதில் சென்று சேரவேண்டும் என்ற நோக்கத்துடன் எமது அரசு மக்களோடு மக்களாக இருந்து பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

இந்த இனிய நாளில், புதுச்சேரி மாநில மக்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது குடியரசு நாள் நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

வே. நாராயணசாமி

(வே. நாராயணசாமி)